# இந்து சாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ce. P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-கூச] யாழ்ப்பாணம்:- நந்தன வருடம் தைமீ கசஉ செவ்வாய்க்கிழமை (27 Jan. 1953) [இல - அo]

தேனே அமுதே கரும்பின் தெளிவே

திருச்சிற்றம்பலம்.

யானேபொய்யென்னெஞ்சும் பொய்யென் அன்பும்பொய்
ஆனால் வினையே னழுதா லுன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் றெளிவே தித்திக்கும்
மானே யருளா யடியே னுனைவந் துறுமாறே.

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டர் திருநாள்

## உடல் நலம் பாராத உண்மைத் தொண்டர்

### அரிவாட்டாய நாயனார் 27—1—53

சோழ மண்டலத்திலே கணமங்கலத்திலே செல்வமும் சிவபத்தியுமுடையராய் இல்வாழ்க்கை வாழ்ந்தார் அரிவாட்டாய நாயனார். செந்நெல்லரிசியும், செங்கீரையும், மாவடுவும் சிவபெருமானுடைய திருவமுதுக்குக் கொடுக்கும் வழக்கமுடையவர். சிவபெருமானுடைய திருவருளின்படி வறியவராயினர். உணவேயின்றி உடல் தளர்ந்தபோதும் தாம் செய்த திருத்தொண்டைக் கைவிட்டாரல்லர்.

செந்நெல்லரிசி முதலியவற்றை ஒருநாள் திருக்கோயிலுக்குக் கொண்டு போகும்பொழுது கால் தளர்வுற்று விழுந்தார். அரிசி முதலியவை கைதவறின. தமது திருத்தொண்டுக்கு இடையூறு உண்டாயிற்றேயென்று உளம் நொந்து சிக்கலாற்று தன் கழுத்தை அரிந்தார்.

பரிவுறுசிந்தை அன்பர்
பரம்பொருளாகி யுள்ள
பெரியவ ரமுது செய்யப்
பெற்றிலேன் என்றுமாவின்
வரிவடு விடேலென்றுமுன்
வான்கழுத்தரிவாள் பூட்டி
அரிதலாம் அரிவாட்டாயர்
ஆயினர் தூயநாமம்

இத்தகைய திருத்தொண்டினை பேருய்ச்சிவலோகத்தையடைந்தார்.

இவர் வாழ்ந்தது இல்வாழ்க்கையே. தமது செல்வத்தோடு சிந்தையும் செயலும திருத்தொண்டுக்கேயாக்கினர். "மானிடப் பிறவிதானும் வகுத்தது மனம்வாக்காயம்—ஆனிடத்தைந்துமாடும் அரன்பணிக்காகவன்றோ" என்னுஞ் சிவஞானசித்தித் திருவாக்குக்குத் தரும் வாழ்க்கை இலக்கணம் இவரிடத்தேயமைந்து விளங்கியது.

சிவபெருமான்மீது அன்புப் அன்பாலாகும் இவதொண்டும் மானிடவாழ்க்கையின் பயனாகிய பேரின்பம் பெறுதற்குச் சிறந்த சாதனங்களாயமைதலை இத்திருச் சரிதையால் அறிய வருகின்றது.

## கடவுட் காட்சி கைவரப்பெறலாம்

### சைவாசாரியர் சான்றுரை பகர்ந்தார்

கடவுள் என்பது இயவுள், விக்குள் என்பவை போலும் ஒரு தமிழ்ச்சொல். உள் என்பது, இக்காலத்து விகுதி என்று கூறப்படினும், அக்காலத்தில் அவ்வாறுகொண்டு கூறப்பட்டதில்லை. இயக்குதலுள்ளது இயவுள். விக்குதலுள்ளது விக்குள். அவ்வாறு கடத்தலுள்ளது கடவுள் என்றும் கடத்தல் என்னும் தொழிலுக்குச் செயப்படு பொருளாக மாயேயம், மாயை,கன்மம், மலம் என்னும் பாசக் கூட்டத்தையும் பசுக் கூட்டத்தையும், அப்பசுக்களின் மனம் வாக்குக்களையும் கருதுவது அறிவுடைமையைக் குறிக்கும்.

'கண்ணுங் கருத்துங்
கடந்ததொரு பேறு'
'எல்லாங் கழன்ற இடமே
சிவம் என்று
சொல்லா துவர்கழன்ற
தூயோர்கள்'

என்னுந் திருக்களிற்றுப்படியார் தகளறுபோதவசனமும், 'மாற்றம் மனங்கடந்து நின்ற மறையோன்' 'கரணங்கள் எல்லாம் கடந்துநின்ற கறைமிடற்றன்' என்னுந் திருவாசகமும் இங்கு நோக்கத்தக்கன.

அவ்வாறு பசுபாசங்களைக் கடந்ததொரு மெய்ப்பொருளை அவ்விடத்து நின்று கண்டவரே அருளாளர் ஆவர். சைவசமயாசாரியர் நால்வரும், சந்தனாசாரியர் நால்வரும், அவர் வழிபொழுகிய சான்றோரும் அவ்வருளாளரே. அதனை மெய்ப்பிக்கப் பல சான்றுகள் அவரவர் அருளிச் செய்தவற்றுள் இருக்கின்றன.

#### திருஞானசம்பந்தர் திருவாக்கு

பெருநெறிய பிரமாபுரம் மேவிய பெம்மானை ஒருநெறிய மனம் வைத்துணர்(ந்த) ஞானசம்பந்தன் உரைசெய்த திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாயின், அவர் வினையின் நீங்கி விளங்கிய முதல்வர் என்பதில் ஐயம் ஏற்படுமோ?

'மலைமினுர் பருப்பம்
அருத்திமாற் பேறு
மாசிலாச் சீர்மறைக்
காடுநெய்த் தானம்
நிலையினான் எனதுரை
தனதுரை யாக
நீறணிந் தேறுகந்
தேறிய நிமலன்'

என்றதில், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாய்மொழியே சிவபெருமான் திருமொழியாகும் உண்மை குறித்தவாறு காண்க. இன்றேல் 'காழி ஞானசம்பந்தன், பழிகள் தீரச் சொன்ன சொல் பாவநாசம் ஆதல்'கூடுமோ? "சொற்றுணை வாழ்க்கை துறந்து உம் திருவடியே அடைந்தோம்" 'கண் இமைபாதன மூன்றுடையீர் உம்கழல் அடைந்தோம்" என்று இறந்தகாலத்தாற் கூறியதும், அடைந்தாலும் அவ்விறைவனை இடை விடாது உணர்வதால் 'உணர் ஞானசம்பந்தன்' என வினைத்தொகையாகக் கூறியதும் கருதில் இருத்தற்பாலன.

#### அப்பர் அருள் மொழி

திருநாவுக்கரசு நாயனார், 'வலம்புரத்து அடிகள்தம்மை நான் அடைந்து உய்ந்தப்பெற்று நல்வினைப்பயன் உற்றேனே' "ஓர்த்துள வாறுநோக்கி உண்மையை உணராக் குண்டர்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## "இலக்கியக்குடியரசு" கண்ட ஔவையார்

### சங்கத் தமிழ்த்தகைமை உரைத்த மூதாட்டி

நீரோ(டு) அறுசுவை போம்
தந்தையொடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்
போம்—ஆயவாழ்(வு)
உற்றாருடன்போம் உடன்பிறப்பால்
தோள்வலி போம்
பொருவியோ(டு)எவையும்போம்.

இப்பாவில் மனைவியின் மாட்சிமை எவ்வாறு உயர்த்திப்பிருக்கிறார்! உபசாரமா? இல்லை, உண்மை. திருவள்ளுவநாயனாரும் "இல்லாள் மாண்பே வாழ்க்கையின் மாட்சி. அஃதில்லையாயின் இஃதுமில்லை. நலன்களுக்கெல்லாம் காரணமாயுள்ள இல்லவள் இருக்க ஒருவனுக்கு இல்லாததுயாது? அவள் இல்லாதபோது அவனுக்கு இருப்பது யாது?" என்று கேட்கின்றாரல்லவா? இவ்வரிய கருத்தை ஔவையார் "மடக்கொடி இல்லா மனை பாழ்" என்று எவ்வளவு அழுத்தமாக இன்னொரு இடத்தில் (நல்வழி) விளக்குகின்றார்.

எல்லோராலும் போற்றப்படுகின்ற நல்லோர் உலக மக்கள் நல்வாழ்வுக்குக் காரணமாகின்றனர் என்பதை ஓர் உவமை வாயிலாய் [illegible] இருப்பதுபோற்றற்குரியது.

நெல்லுக்கிறைத்த நீர்
வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே
பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல்
அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.

அம்மையார் "நல்வழி" நூலின் காப்பு பின்வருமாறு:—

— "தொண்டன்" —

பாலுந் தெளிதேனும்
பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்
தருவேன்—கோலம் செய்
துங்கக் கரிமுகத்துத்
தூமணியே! நீ எனக்குச்
சங்கத்தமிழ் மூன்றுந் தா.

நல்வழிக்கும் சங்கத் தமிழுக்கும் இயை பிருக்கிறதென்று தெரிகிறது. உடலுக்கு உறுதியாகிய கருப்பொருள்கள் கிரமபிப பால, தேன், பாகு, பருப்பு இவை நான்கையும் கலந்துகொடுத்து அதற்கு ஈடாகச் சங்கத் தமிழை விரும்புவதால் நல்வழிக்குப் பயன்படக்கூடிய [illegible]

## அந்நியர் ஆட்சி சகிக்காத திருக்கோணசலம்

### மக்கள் மனம் மகிழ மறுமலர்ச்சி

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரின் தேவாரச் சிறப்புப் பெற்ற திருக்கோணசலம் பல்வேறு பரதநாட்டுச் சைவ மன்னரின ஆதரவும குளக்கோட்டனின் நீடு பணியும் கொண்ட திருக்கோணசலம் மறமே மதமாகக்கொண்ட புறநாட்டாளுகையின்போது மறைந்திருந்தது வரலாற்றுண்மை.

புறநாட்டரசியல்போக அதற்குத் துணையான மற்றைய புறக்கொள்கைகளும் விலகுங்காலம வந்துவிட்டதென்றதற்கறிகுறியாகப் புதை பொருளகளாகக் கிடந்த திருக்கோணேசத் திருவுருவங்கள் இரண்டாண்டுகளுக்கு முன் கண்டெடுக்கப் பெற்றுரிய முறையிற் போற்றிப் பேணப்படுகின்றன.

திருக்கோணசலத்தில் புறநாட்டரசர்மறச்செய்கை கண்டு திருத் தமபலகமத்தில் கோணேசர் கோயில கொண்டே ஆண்டுகள் மூந்நூறாய்விட்டன இப் புனித நிலையத்தில் திருக்கோணேசப்பரின் அம்மையின் பழைய உருவங்கள உள்ளன.

இக்கோயிலைப் புதுக்கிமைக்குத் திருப்பணிச் சபை முன்னைநாள் திருகோணமலைப் பிரதிநிதியாயிருந்த திரு. சு. சிவபாலன் அவர்கள் தலைமையிலும, பண்டிதர் ஐ. சரவணமுத்து முதலிய நற்றொண்டர்கள் பலரின் பேருழைப்பினாலும நேற்றையத்தினம் கோநாயகனை மூர்த்திகளுக்கு மகா கும்பாபிஷேகம் நடத்தச் சிறந்த ஒழுங்குகள் செய்துவைத்தது. இலங்கா தீபத்தெங்கணுமிருந்து ஏராளமான சைவ அன்பர்கள் திரண்டுவந்து இப் பெருவைபவத்திற் கலந்துகொண்டனர் கொளகின்றனர். கூட்டுப்பிரார்த்தனைகள் சொற்பொழிவுகள் முதலியனவும் முறையாக நடைபெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மை அப்பன் ஆனந்த நடனம்

## தைப்பூசத் திருநாட் சிறப்பு

தைப்பூசம் வியாழக்கிழமை யோடுகூடுஞ் சித்தயோகதினம் வர, அன்று மத்தியானத்திலே, ஆயிர முகத்தையுடைய பாணுகம்பர் ஆயிரஞ்சங்கூத ஆயிரந் தோளையுடைய வாணாசுரன் குடமுழா ஒலிப்பிக்க, பஞ்சதுந்துபி யொலியும் வேதவொலியுங் கந்தருவருடைய கீதவொலியும் மிக்கெழ, ஞானசபையிலே சிவபெருமான் உமாதேவியாரோடு நின்று ஆனந்த நிருத்தஞ் செய்தருளினர். வியாக்கிரபாத முனிவர் பதஞ்சலி முனிவர் என்னும் இருவரும், பிரமா விட்டுணு முதலிய தேவர்களும், தில்லைவாழந்தணர் மூவாயிரரும், பிறரும

**தைப் பூசம்**
**29-1-53 வியாழக்கிழமை**

சிவபெருமானுடைய திருவருளினாலே, ஞானக்கண்ணைப் பெற்று, அவருடைய ஆனந்தத் தாண்டவத்தைத் தரிசித்து, உரோமஞ் சிலிர்ப்ப, நெஞ்சநெக்குருகக், கண்ணீர் பொழியச், சிவானந்தசாகரத்தில் மூழ்கினார்கள். பதஞ்சலி முனிவர் "எம்பெருமானே! இந்த ஞானசபையிலே உமாதேவியாரோடு இன்று முதல் எக்காலமும் ஆன்மாக்களுக்கு ஆனந்த நிருத்தத்தைப் புலப்படுத்தியருளும்" என்று வேண்டிக் கொண்டார். அதற்குச் சிவபெருமான் உடன்பட்டருளினார்.

சிவபெருமான் பணித்தருளியபடியே, தேவர்கள் அந்த நிருத்தஸ்தானத்தை வளைத்து, உயர்ந்த பொன்னினாலே ஒரு மகாசபை செய்தார்கள். சிவபெருமான், அன்று தொடங்கித் தேவர்களும் வியாக்கிரபாதமுனிவர் பதஞ்சலி முனிவர் முதலாயினோரும் வணங்கச், சிவகாமியம்மையாரோடும் கனகசபையிலே எக்காலமும் திருநிருத்தத்தைத் தரிசிப்பித்தருளுவாராயினர்.

இங்கே எல்லாரும நிருத்த தரிசனஞ் செய்து கொண்டிருக்குங்காலிலே, பிரமதேவர், கங்கைக்கரையி லுள்ள அந்தர்வேதியிலே ஒரு செய்கை தொடங்கிக் கொண்டு, தில்லைவாழந்தணர்களையுந் தேவர்களையும் அழைத்துக்கொண்டுவரும் பொருட்டு, நாரத முனிவரைத் தில்லைவனத்துக்கு அனுப்பினார். அந்நாரத முனிவருடைய சொல்லைக்கேட்ட தேவர்களும் அந்தணர்களும் "இங்கே ஆனந்த நிருத்தமாகிய அமிர்தத்தை உண்ணும் நாங்கள் இனி உங்கள் அவியை உண்ணோம்" என்றார்கள். அதனை நாரதமுனிவர் சென்று, பிரமதேவருக்கு விண்ணப்பஞ்செய்ய, அப்பிரமதேவர் தாமே சென்று, தில்லைவனத்தையடைந்து, சிவகங்கையிலே ஸ்நானஞ் செய்து, திருநிருத்தத்தைத் தரிசித்துச் சிவலிங்கத்தை வணங்கி, வியாக்கிரபாத முனிவரிடத்தே போய், அவர் வாயிலாகத் தில்லைவாழந்தணர்களையுந் தேவர்களையும் உடன்படுத்தி, அந்தர்வேதிக்கு அழைத்துக் கொண்டுபோய்த், தமதியாகத்தை முற்றுவித்தார். வியாக்கிரபாத முனிவரும் பதஞ்சலி முனிவரும், நிருத்த தரிசனஞ் செய்துகொண்டு, தில்லைவனத்தில இருந்தார்கள்.

— நாவலர்

### எமது அறிவித்தல்

—0—

வியாழக்கிழமை (29-1-53) தைப்பூச காலாகலின், சைவப்பிரகாச அச்சுயந்திரசாலை, இந்துசாதன அலுவலாளர்களுக்கு விடுமுறை நாளாகும்.

அன்று அச்சுயந்திரசாலை மூடப்பட்டிருக்குமென்றும், அடுத்தநாளாகிய வெள்ளிக்கிழமை (30—1—53) இந்துசாதன ஆங்கில தமிழ் வெளியீடுகள் வெளிவரா என்றும் அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

அதிபர்.

வாழகஅந்தணர் வானவர் ஆனினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம்அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே

## இந்துசாதனம்

வாழ். நந்தன ஹு தைமீ கசஉ செவ்வாய்க்கிழமை

### சிறப்பொடு பூசனை செய்தல்

அன்றொரு நாள் அந்நியன் ஒருவன் ஈழத்திற் புக்கான். புக்கவன் போர் தொடுத்தான் பொருள் கவர்ந்தான் அரசுகொண்டான். அவ்வளவில் நின்றானா? இலங்கையரின் ஆன்ம ஈடேற்றத்துக் கிடுக்கண் விளைவித்தான். தன்மொழி புகுத்தித் தன் மதம் நிறுவினன். இந்நாட்டாரின் கோயில்களைக் கொள்ளை அடித்தான்.

அடிமைத் தனத்தின் பெறுபேறு எத்துணைத் தென்றுணரப் பலவாண்டுகள் சென்றன. உணர்ச்சி மிக்கதும் ஊக்கங்கொண்டு புறநாட்டரசியல் போக்கி விட்டோம். ஆனல் அந்நிய ராட்சியிட்ட மறுக்களை மாற்றக் காலம் இன்னமுஞ் செல்லவேண்டும்போ லிருக்கிறது. கோயில்களைக் குலைத்த கொடுமையை எண்ணும்போதெல்லாம் இதயம் துடிக்கின்றதே. சிறப்பொடு பூசனை செய்யப்பெறுதொழிமவே வாரி வளங்குன்றத் தொடங்கியது.

எனினும் இறைவன் இன்னருளால் இன்று முன்னை நாட் கோயில்கள் பின்னரும்மன்னமவொழுங்குடன் நடைபெறும் காலமுதித்துவிட்டதென்று சைவத்தமிழ் மக்கள் பேருவகைகொள்ளக்கூடியகாரியங்கள் நடைபெறுவதற்குப் புண்ணிய சீலர்கள் பெரிதும் முயன்று வருகின்றார்கள் என்பது திருககோணசலப் பெருமானுக்குத் திருத் தம்பலகமதிலும் வைத்தியநாதப் பெம்மானுக்கு வண்ணையிலும் நடக்கும் அருள் ஒளி விளக்க மாபெருங் கும்பாபிடேகங்கள் நன்கு காட்டுகின்றன.

திருக்கோயில்கள் சீர்கெடுவதற்குப் பல காரணங்கள் உள. அரசியல் பிழைத்தோ அவனியில் மறச்செயல் மிகுத்தோ, மக்கள் மன நிலை மாறுதலடைந்தோ இன்னவற்றால் ஆலயங்களின் நித்திய நைமித்திகங்கள் தவறுகின்றன? திருக்கோயிற் பொறுப்புடையவர்களும் இவ்வாறு நெறி பிறழுவதற் கேதுவா யிருக்கின்றனர்! ஆலயமில்லா வூருக் கழகில்லையென்றங்கு திருக்கோயில் சீர் குறைந்த நாட்டிற் றீமையே குடிகொள்ளச் செம்மையில்லாதொழியும். எனவே மக்கள் எக்கருமத்திலும் திருக்கோயிற் பணியே நனி வேண்டற்பாலதென்றுணர்ந்து மண்ணில் மறைந்துள்ள ஆலயங்களைப் புதுக்குவித்தும் சீர்குன்றிய திருககோயில்களைச் செவ்வனே நடத்த ஒழுங்குகள் செய்தும் சைவத தொண்டாற்றுவாராக.

### அண்ணாமலைச் சர்வகலாசாலை

**சேர். C. P. இராமசாமி ஐயர் அவர்கள் உபவித்தியாநாயகர்**

அண்ணாமலைச் சர்வகலாசாலை உபவித்தியாநாயகர் பதவியை ஏற்பதற்கு சேர் C. P. இராமசாமி ஐயர் அவர்கள் இசைந்துள்ளாரென அறியவருகின்றது. இப்பதவியை வகித்திருந்த Dr. R. K. சண்முகம் செட்டி அவர்கள் தேகசுகம்காரணமாய் இப்பதவியை விட்டு நீங்குகிறார்.

### சுபாஸ் சந்திரபோஸ்

சுபாஷ் சந்திரபோஸ் உயிருடனிருக்கிறாரெனப் பலர் இந்தியாவிலே பலப்பல காலங்களில் வாதாடி வருகின்றனர். இவ்வாறு வாதாடி அவரைப் பற்றி அரசாங்கம் விசாரணை செய்யவேண்டுமென்று கல்கத்தா நகரசபை ஓர் பிரேரணை நிறைவேற்றி யிருக்கிறது.

### தென்னாபிரிக்க செய்திகள்

திரு மணிலால் காந்தி அவர்கள் தென் ஆபிரிக்க நிறத்துவேஷ சட்டத்தை மீறியதாகக் குற்றஞ் சாட்டிய வழக்கு திங்கட்கிழமை 26-1-53 விசாரணை செய்யப்படும். இவருடன் ஆறு வெள்ளை மக்களும் இத்தகைய குற்றச்சாட்டில் எதிரிகளாயிருக்கின்றனர். இவர்களுள் ஒருவர் ஒருபழைய தலைமைத் தேசாதிபதியின் மகன். மற்றொருவர் ஒரு நூல் ஆசிரியை என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக்கட்சி மலான் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானஞ் செய்யுமாறு ஓர் பிரேரணை பிரேரிக்கத் தீர்மானித்திருக்கின்றது

## வாழ்க்கை வானில்

வளர்மதி

**உண்ணாது உயிர் வாழ்தல்....?**

ஆகாரமின்றிக் காலங்கழிக்கும் ஸ்ரீமதி தனலக்குமியம்மை கூர்க் பகுதியி லுள்ளாருக்கு மாத்திரமன்றிப் பாரதநாட்டி லுள்ளவர்களுக்கும் புறநாட்டாருக்குமே பெரும் ஆச்சரியத்தை விளைத்திருப்பதை எவருமறிவர்.

X X X

இற்றைக்கு முந்நூறாண்டுகளுக்கு முன்னர் ஒல்லாந்த கடலோடி ஒருவர் நியுகினி என்னும் நாட்டுப் பழைய மனிதவகுப்பார் சிலர் உணவே இன்னதென்பதை அறியாதிருந்தனரெனத் தான் அறிந்ததாகச் சொல்லியபோது அவரைக் கேலிசெய்து விட்டனர் வரலாற்றுரைகாரர்.

இப்பொழுது பாரதநாட்டில் உண்ணாதுயிர் வாழுதல் ஓர் ஆச்சரியமானதன்றெனப் பலபல பாகங்களிலு மிருந்து அன்னாகார மில்லாதிருப்பவர்கள் நீராகாரம் கொள்ளாதிருப்பவர் என்றித்தகையர் உளரெனச் செய்திகள் அறிவிக்கின்றன. அத்தகைய செய்தி யொன்று பங்களூரில் திரு. சிறிநிவாசன் மனைவியாரான திருமதி. நாகலக்குமி யம்மா ஆறுண்டுகளாக நீரன்றி வேறொன்றுமுட் கொள்ளாது வாழ்க்கை நடத்துவதாகக் கூறுகிறது!

X X X

பசிப்பிணிக்கு ஆளாகாது பழகி வருவதை இன்றைய அரசியல் வாதிகள் செய்து (காட்டுவார்களேயானல்.......) வருவார்களேயானல் அரசியல் அறவியலாகு மன்றே!

### வண்ணை வைத்தியேசுவர ஆலயப் புனருத்தாரணம்

**திரு. ப. பாலசுப்பிரமணியம் எழுதுவது**

வைத்தியேசுவர ஆலயத் தரும பரிபாலகர் திரு வை. கந்தப்ப செட்டியார் வெளியிட்ட விஞ்ஞாபனத்திற் கண்டபடி 25-1-53 ல் இவ்வாலயப் புனருத்தாரண அஷ்டபந்தன சமபுரோக்ஷண மகா கும்பாபிஷேகக் கிரியைகள் இதற்காக இந்தியாவிலிருந் தழைக்கப்பட்ட கல்வி அறிவிற் தலைசிறந்த திருக்கழுக்குன்றம் பிரம்மஸ்ரீ சந்திரசேகரக் குருக்கள் சர்வசாதகத்தில் திருநீடூர் பிரமஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள் முதலானவர்களால் 9 நாட்களின் முன் ஆரம்பிக்கப் பெற்று விதிப்படி சிறப்பாக நடைபெற்றன. அன்று காலை 9 மணிக்கு இவ்வாலயத் தருமபரிபாலகர் ஸ்ரீ வை. கந்தப்பசெட்டியாரும, ஸ்ரீ சித மு. ப. சிதம்பரநாதச்செட்டியாரும்' பண்ணினேர்மொழியாளுமை பங்கரோ மண்ணினார் வலஞ் செய்மறைக்காடரோ,கண்ணினலுமைக் காணக் கதவினைத், திண்ணமாகத் திறந்தரு 'செய்மினே' என்னும் தேவாரத்தை ஓதி மங்கலவாத்தியம் முழங்கப் 10 வருஷங்களாகப் பூட்டப்பட்டிருக்க ஆச் சிவாலய மகா மண்டபத் திருக்கதவைத் திறந்து இருவரும் செய்தீபம்இட்டார்கள் இது ஆனபின் யாகபூசை முதலானவை நடந்து பூரணாகுதி [illegible] வாலாம்பிகை முதலாம் மூர்த்திகளுக்கு மகா கும்பாபிஷேகம் இனிது நடைபெற்றது. இச் சமயத்தில் ஆகாய வெளியில் பல கருடன்கள ஆலயத்தைச் சுற்றி வட்டமிட்டன இத்தரிசனமும் பெரும் அனுக்கிரகமாகும், இதன் பின் மகாபிஷேகம் ஆசீர்வாதம் எல்லாம் ஆனபின் இரவு எட்டு மணியளவில் வாலாம்பிகாசமேத வைத்தியேசுவரமிக்கு முறைப்படி திருக்கல்யாண உற்சவம் இனிது நடைபெற்றது. இதன்பின் சந்திரசேகர சுவாமி அருட்சக்தியாரோடு இடபாரூடராய் விநாயகர், முத்துக்குமாரசுவாமி சண்டேசுரர் முதலாம் மூர்த்திகள் புடைசூழத் திரு வீதிக் கெழுந்தருளித் தச வருஷங்களாக ஏங்கலாய்த்திருந்த அன்பர்களுக்கெல்லாம் ஆனந்த தரிசனம் தந்தருளினார். இன்று அதிகாலையிலிருந்து இரவு மூன்று மணி வரையில் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் தரிசித்துப் பெருமானாரது அநுக்கிரகத்தைப் பெற்றார்கள் பிராமண சாமாராதனை மாகேசுர பூசை அன்னதானம் முதலானவை கிரமமாக நிகழ்தன, தினந்தோறும் உச்சிக்காலத்தில் விசேட அபிடேக ஆராதனைகளும் நித்தியபூசைகளும் நடைபெற்று வருகின்றன.

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

### சைவ சித்தாந்த விரிவுரைகள்

பழனி வேதாகம பாடசாலைத் தலைமையாசிரியரும் சித்தாந்த பண்டிதருமாகிய சித்தாந்த சரபம் காசிவாசி சிவஸ்ரீ, ஈசானசிவாச்சாரியரவர்கள் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை யாதரவில் அச்சபையினது சைவாச்சிரம நாவலர் மண்டபத்தில் சைவ சித்தாந்த விரிவுரைகள் தொடர்பாக நிகழ்த்த இசைந்து யாழ்ப்பாணம் வருகின்றார்கள். அவருடைய முதற் பிரசங்கம் நந்தன ஹு தைமீ கஎஉ (30-1 53 வெள்ளிக்கிழமை இரவு 6½ மணிக்கு ஆரம்பமாகும். சைவ சித்தாந்த வகுப்புகளும் ஒழுங்காக நடைபெறும்,

சைவாபிமானிகள் யாவரும் சமூகமளித்து அவருடைய அறிவுரைகளையும் சைவ சித்தாந்தவுண்மைகளையும் கேட்டு நற்பயனடைவார்களாக.

சிவாச்சாரியார் அவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் காலத்தில் சபையாதரவில் பிரசங்கஞ் செய்யாத வேளைகளில் அவரைப் பிற இடங்களுக்கழைத்துப் பிரசங்கஞ் செய்விக்க விரும்பும் அன்பர்கள் சைவபரிபாலன சபைச் சமயப் பிரசார அமைச்சரிடம் வேண்டிய ஒழுங்குகளைச்செய்துகொள்ளலாம்.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்.

M. 227 27—1—53.

# நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## நயினாதீவு — நெடுந்தீவு — புங்குடுதீவு பிரயாணவசதி வேண்டும்!

இலங்கையின் வடபகுதியில் ஏழு தீவுகளுண்டு. இவைகள் நெருங்கி இருந்தும் இவற்றின் பிரயாணவசதிகள் மிகவும் கடினமாயுள்ளன. தற்பொழுது புங்குடுதீவுக்கும் வேலணைக்குமிடையில் அரசினர் தாமபோதியமைத்தமையினால் புங்குடுதீவு வாசிகள் தங்கள் பிரயாணத்தை சுலபமாகவும் சீக்கிரமாகவும் முடித்துக்கொள்கின்றனர். புங்குடுதீவிற்கு அயலில் உள்ள, நயினாதீவு வாசிகள் போக்குவரவு வசதிகள் இன்றித் துன்பமுறுகின்றனர். இந்துக்களும் பௌத்தர்களும் புண்ணியபூமியெனக் கருதும் நயினாதீவுக்கு இந்து பௌத்தமத யாத்திரீகர்கள் தினமும் நூற்றுக்கணக்காய் இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து சென்று திரும்புகின்றனர். இவர்கள் நயினாதீவுக்கோ அன்றி நெடுந்தீவுக்கோ செல்லவேண்டுமானால் ஊர்காவற்றுறைமுகத்திற்குச் சென்று அங்கிருந்து இயந்திர (மோட்டர்) வள்ளமூலமோ அன்றிப் பாய்த் தோணிகள் மூலமோ இத்தீவுகளை அடையவேண்டும். இப் போக்குவரவும் சில குறித்த நேரங்களிலேயே நடைபெறுகின்றது இவைகாரணமாக யாத்திரீகர்களும் பெரும் வசதியீனமுறுகின்றனர். இவ்வசதியீனத்தை நீக்கிப் பிரயாணத்தைச் சுலபமாக்குவதற்கு ஓர் வழியுண்டு. அது எதுவெனில் இங்கே அறியத் தருகிறேன்.

புங்குடுதீவு புளியடியிலுள்ள துறைமுகம் புராதன இயற்கையான துறைமுகம். இத்துறைமுகத்திற்குச் செல்வதற்கு வசதியான தெருவும் கடற்கரைப் பாலமும் கட்டப்பட்டிருக்கின்றன. இங்கிருந்து நயினாதீவிற்கு ஏறக்குறைய 1½ மைல் நீளமான கடல்தூரம் உண்டு! நயினாதீவிலும் நாகபூஷணி அம்மன் கோவிலடியில் வசதியான தெருவும் கடற்கரைப்பாலமும் கட்டப்பட்டிருக்கின்றன. இவ்விரு பகுதிக்குமிடையில் ஆயம் உண்டாக்கினால் இருபத்துநாலு மணித்தியாலமும் பிரயாணஞ் செய்ய வசதியுண்டு. நயினாதீவிற்குச் செல்லும் யாத்திரீகர்கள், கார் பஸ் முதலிய வண்டிகள் மூலம் யாழ்ப்பாணமிருந்து புளியடியிற் துறைமுகம் வந்து துரிதமாகப் பிரயாணஞ் செய்யக் கூடும்.

ஆகவே, அரசினர்புங்குடுதீவு புளியடியிற் துறைமுகத்திற்கும் நயினாதீவுக்குமிடையில் ஆயம் உண்டாக்கிப் பிரயாணத்தைச் சுலபமாக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

வி. கார்த்திகேசு.
கௌரவ காரியதரிசி,
சப்ததீவு இந்துமகாசபை.

இருப்பிட்டி,
புங்குடுதீவு, 25-1-53,

### கல்முனையில் கள்ளுக்கடை நீக்கம்

கள்ளுக்கடை நீக்கும் பொருட்டுக் கல்முனையில் நடத்திய வாக்கெடுப்பிலே நீக்குதற்கு 1086 வாக்குகளும் நீக்கக்கூடாதென்று 23வாக்குகளும் கிடைத்தனவாம். கல்முனையிற் கள்ளும் நீங்கியது.

### வண்ணை வைத்தியேசுவர ஆலயப் புனருத்தாரணம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் முதலாம் யாழ்ப்பாணத்துப் பிரதான குருக்கள்மாரும் இக் கும்பாபிஷேகத்திற் சாதகமாக இருந்தார்கள்.

சில வருடங்கட்கு முன் அஸ்திபாரமிட்டிருந்த இக் கோவிலின் ராஜகோபுரத்துக்கு இந்த மங்கல தினத்திலே கிலைக்கல் நிறுவப் பெற்றது.

கள் திருவாரூர்த்தியாகராஜலீலை என்ற நூற்பெயரோடு சிறந்த கவிகளாக இயற்றி வெளியிட்டுள்ளார்; இவ்வைலீலைகள் அக்காலத்திற்கிடைத்தில; ஆனால், திருவருட்செயலாற் போலும் இந்த லீலைகளுள் முந்நூற்றறுபது, திருமகள் கடாட்சமும் கலைமகள் கடாட்சமும் ஒருங்கு அமையப்பட்ட சைவத் திருவாளரும், திருச்சி மாவட்டம் பிக்ஷாண்டார் கோவில் - பண்ணையாளருமாகிய ஜீ. இராஜகோபால பிள்ளையவர்கட்கு, அவரது நண்பரொருவர் மூலம் முந்நூற்றறுபது லீலைகள் சில ஆண்டுகட்கு முன்னர்க் கிடைத்தனவாகும். இவற்றுள் முதல் ஐம்பது லீலைகளை மேற்படி பிள்ளையவர்கள் சங்கீதராய்ந்த தியாகராஜர் கீர்த்தனம் முதலிய சிலவும், தியாகராசப் பெருமான் கமலாம்பிகையம்மையார் என்னும் மூர்த்திகளின் வர்ணமமைந்த திருக்கோலப் படங்களும் சேர்த்து உயர்ந்த முறையில் அச்சிடுவித்து வெளியிட்டுள்ளார்.

கேட்குறிற் சிவகதையே கேட்டல் வேண்டும்" என்றபடி சைவநன்மக்களாயுள்ள யாவரும் தாம் ஈடேறும் வண்ணம் பயபத்தியுடன் கேட்கவேண்டுவன இத்தியாகராஜலீலை போன்ற சிவ சரிதைகளாகும்; காலபேதத்தினால் சிவபுராணங்கள் பிரபந்தங்கள் முதலியன இக்காலத்தில் அலட்சியஞ் செய்யப்படலாயின; விபரீத நூல்களும் வீண் பாடல்களும் பாமர சனங்களால் படிக்கப்படலயின; இங்ஙனஞ் செய்கையொழித்துச் சைவசமயிகள் இத்தியாகராஜலீலை போன்ற சிவகதைகளைப் படித்து ஈடேறும் வண்ணம் சைவப்பெரியார் அறிஞர்களாயுள்ளவர்கள் சமானிய மக்களுக்குப் போதித்தல் வேண்டும். திரு. இராஜகோபால பிள்ளையவர்கள் செய்ய எடுத்துக்கொண்ட அரும் பெருஞ் சைவ நூல்களை வெளியிடுதலாகிய இச்சிவத்தொண்டு சிவப்பிரீதியானது; அந்தத் தியாகப் பெருமானுடைய திருவருளைப் பெறுதற்கு வழியாகவுள்ளது.

### வியாபாரத்திற் கழகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுட் காட்சி கைவரப்பெறலாம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

வார்த்தையைமெய்யென்றெண்ணி
மயக்கில்வீழ்ந் தழுந்துவேனை
பேர்த்தெனை ஆளாக்கொண்டு
பிறவிவான் பிணிகள் எல்லாம்
தீர்த்தருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வனாரே."

'தெள்ளியேனாகி நின்று தேடினேன்காடிக்கண்டேன்' என்று கடவுளை அடைந்து கண்டதும் அன்றி, அவரோடு உரையாடிய திறத்தினை.

"வெள்ளநீர்ச் சடையனார்தாம்
வினவுவார் போல வந்தென்
உள்ளமே புகுந்து நின்றார்க்கு
உறங்குமான் புடைகள்போந்து
கள்ளரோ புகுந்தீர் என்னக்
கலந்துதான் நோக்கி நக்கு
வெள்ளரோம் என்று நின்றார்
விளங்கிளம் பிறைய னாரே."

என்ற திருநேரிசையாலறிவித்தருளினர். அவ்வாறே நமக்கும் அப்பேறு வாய்க்க,

"நீலக்குடியரன்
மையலால் மறவா மனத்தார்க்
கெல்லாம்
கையில் ஆமலக் கனி ஒக்குமே"

என்றுபதேசித்தருளினர். 'சங்கரன்....கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோம்' 'சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்' 'எண்குணத்தானோம்' 'எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால் கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்' என்ற உடம்பாட்டினும், எதிர்மறையினும் உணர்த்தியவற்றால், அப்பர் கடவுளைக்கண்டவுண்மை நன்கு புலனாகும்.

### சுந்தரர் மணிவாசகர் திருவாய் மொழிகள்

சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய முதலும் முடிவும் ஆகிய திருப்பதிகம் இரண்டுமே அவர் கடவுளைக்கண்ட வுண்மைக்குப் போதிய சான்றுகளாம். இடையில் உள்ளவற்றிலும் பற்பல இடங்களில் அவர் கடவுட்காட்சியை அறிவித்தருளினார். அவர் கடவுளொடு பேசிய திறமெல்லாம் ஏனையோரிடத்திலும் மிகுந்துள்ளன.

மாணிக்கவாசகர், 'மெய்யே உன பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்' 'மழக்கை இலங்கு பொற்கிண்ணம் என்றலால் அரியை என்று உனைக் கருதுகின்றிலேன்' 'களித்தனன் நின்னைக் கண்டுறக் கண்டுகொண்டு இன்றே' 'சித்தம் சிவம்' 'செய்தன தவம்' 'நிச்சம் என நெஞ்சில் மன்னி யான் ஆகி நின்றான் திருப்பெருந்துறை இறைவன்' என்றருளியவற்றால், கடவுளைக் கண்ட உண்மை புலனாகும்.

சந்தானாசாரியர் முதலியோர் கடவுட் காட்சிக்கு ஆவரவர் செய்த சாத்திரமும் தோத்திரமும் சான்றாயுள்ளன. இவ்வாறு கடவுளைக் காண்பதற்கு வழியாக அவர்கள் கூறுவன பல உள. அவற்றுள், உரையும் உணர்வும் அறுந்து அறுவதே கடவுளைக் கண்டற்குச் சிறந்த வழி என்றனர்.

'உரை உணர்வு இறந்து நின்று உணர்வதோர் உணர்வே,' என்ற திருவாசகத்தை உணர்மின். இவ்வழியல்லாத வழிகள் எல்லாம் இவ்வழியைத் தோற்றுமல் நின்றால், அவற்றைப் பொருட்படுத்தார் மக்கள்.

அரிய பெரிய வழியாகிய இதனை அக்குரு பரம்பரையிற் பெற்று நின்றொழுகிச் சிவமாகிய குருஞானசம்பந்தர்,

"உரைஇறந்தால் உன்னும்
உணர்விறந்தால் மாயைத்
திரைஇறந்தால் காண்கின்ற
தேவை — வரைபெருக
வாசிப்பதும் நாவால்
வாழ்த்துவதும் நாடகமாப்
பூசிப்பதும் சுத்தப் பொய்."

என்று அவ்வழிவை வற்புறுத்தியும், அஃதல்லாத வழிகளைப் பொய்யுறுத்தியும் பாடியருளினர். அருளினும், அவ்வழிகளெல்லாம் வேண்டாதன என்று விபரீதமாகக் கருதலாகாது. அடிப்படையான வழிகளையும் முடிவான வழியையும் அவற்றின் இடையிலுள்ளவற்றையும் ஆராய்ந்து, முடிவைத் தெளிந்து அடைந்தபின்பு, பிறவெல்லாவற்றையும் விட்டு முடிவையே அநுசரித்தல் நன்று. ஞானியரும் புறப்பூசையை விடாமற் செய்தேவாகடவர். சித்தியாரில் 'புறம்பேயும் அரன் கழல்கள் பூசிக்க வேண்டில்' என்றதன் உரையில் சிவஞான மாமுனிவர் எழுதியருளியதாலும், ஞானபூசா விதியில், 'அர்க்கியம் ஒன்று ஆக்கி அக் நீர் சுத்திசேர்வித்து அண்ணல் திருவடி விளக்கி' என்று சுருக்கமுற்ற பூசையை முன்னர்ச் செய்து முடிக்கும்படி கட்டளையிட்டதும், பின்பு 'சிற்பரமாந் தற்பரத்துள் அழுந்தி, நேசத்தின்று அசலத் தூங்கு' என்று 'உரை உணர்விறந்து நின்றுணர்வதோர் உணர்வு, ஆகிய உண்மை ஞானத்தை எய்துமாறு ஏவி, அதன்மேல் 'ஒருமை திரிந்ததாகில் சொற்பதமாம் ஞானநூல் ஓதலாதி தொடங்கு' என்று உபாய ஞானத்தை உறுமாறு பணித்து, அதன் பின்னும், 'அவையும் மடங்கில் அருட்டொழில் தொடங்கு' என்று விரித்த பூசையைச் செய்துவரும்படி விதித்த சைவத் திருநெறியை அறிக.

### விளம்பரம்

மானிப்பாய்க் கிராமச்சங்கத்தைச் சேர்ந்த நவாலியிலுள்ள கல்லுண்டாய் வெளியில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசாங்கத்துடன் 60,000/= க்கும் மேலும் ஒப்பந்தகாரராகப் பதிவு செய்தவர்களிடமிருந்து 1953ம் ஆண்டு மாசி மாதம் 7-ந் திகதி காலை 9 மணிவரை பதிவு செய்யப்பட்ட (Sealed) டெண்டர் எல்லாம் ஏற்கப்படும்.

விண்ணப்பத்திரங்களை முதல் நாள் 12 மணிக்கு முன் இக் கந்தோரில் ரூபா 100/= கட்டிப் பெற்றுக்கொள்ளவேண்டும். இது சம்பந்தப்பட்ட படங்களும் பிறவும் இக் கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம்.

முகாந்திரம். வ. மகேசன்
தலைவர்,
மானிப்பாய்க்கிராமச்சங்கம்,
மானிப்பாய்,
26—1—53.
M. 229 27—1—53

## திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார்

### திரு. ம. வே. தி. ச. அவர்கள் எழுதுவது

#### திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார்

மெய்கண்ட சாத்திரங்களுள் பதினான்கனுட் சேர்ந்தனவாகிய திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் என்னும் இரு சாத்திரங்களும் நுண்ணிய உரைகளுடன் வெளிவந்துள்ளன; யாரோ பெரியர் இந்த இரு சாத்திரங்கட்கும் முந்தியெழுதிவைத்தவுரையை யாழ்ப்பாண நங்கையின் அரும் பெறற் புதல்வரும், மகாதுறவியும், சைவசித்தாந்த சாத்திரங்களையும் இன்னபிறவற்றையும் நன்கு ஆராய்ந்து பக்குவிகள் பலர்க்குப் போதித்து வந்தவரும், மாதவச் சிவஞானயோகிகள் இயற்றிய சிவஞான மாபாடியத்தைப் பரிசீலனை செய்து சிறந்த முறையிலே வெளியிட்டவரும், இலக்கணசுவாமியென்னுமறுநாமத்தோடு விளங்கியவருமாகிய ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் ஆராய்ந்து தொகுத்து வைத்திருந்தனர்; சிதம்பரத்தின்கணுள்ள மேற்படி சுவாமிகள் வாசிகசாலையி லிருந்த அறிக்கையெழுத்துப் பிரதியை, சுவாமிகளின் மாணாக்கருளொருவராகிய சிதம்பரம் திரு. முத்து, வைத்தியலிங்கச் செட்டியார் தமது அறுபதாம் ஆண்டு நிறைவுக்கு நினைவுமலராக நன்கு அச்சிடுவித்து வெளியிட்டுள்ளார். சைவசித்தாந்த நூல்களைப் பயில்வோர்க்கு இப் பழையவுரை இன்றியமையாதது எனலாம்.

#### ஸ்ரீ தியாகராஜ லீலைகள்

(முதற்பிரிவு)

பிறக்க முத்திதரும் தலமாக விளக்குந் திருவாரூரிற் கோயில் கொண்டருளிய தியாகராசப் பெருமானார் தமது மெய்யடியார் பொருட்டுத் தோன்றி அருள்செய்ததாகிய திருவிளையாடல்களே திருவாரூர்த் தியாகராசலீலைகள் என வழங்குவன. அந்த லீலைகள் வடமொழியிலேயே ஆதியிலுள்ளன; காலகதியில் அவைகள் தமிழ மக்களுக்குப் பயன்படும் வண்ணம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. இந்த லீலைகள் முந்நூற்றறுபத்துநான்காகும் என்பர்; இவற்றுள் [illegible] ஞான்கு லீலைகளைச் [illegible] ஞானாக விளங்கிய திரிசிபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்

# "இலக்கியக் குடியரசு" கண்ட ஒளவையார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் உடையன சங்கத்தமிழ்கள் எனப் பெறப்படுகின்றது "நல்வழி" இறுதியில் :

தேவர் குறளும்
திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனி
மொழியும் — கோவை
திருவாசகமும் திருமூலர்
சொல்லும்
ஒருவாசக மென்றுணர்,

என்று சங்கத் தமிழ் முதல் பிற்காலத் தமிழ்கள் பலவும் ஓரியைபுடையன வென்று குறிப்புத் தருகின்றார். முதலிலும் முடிவிலும் சங்கத் தமிழுக்கு முதன்மை தந்து அமைத்துக் கொள்ளுவலாலும் தேவார திருவாசக முதலிய திருநெறித் தமிழ்களோடு அதனை இயைத்து மொழிதலாலும் நல்வழியின் இடைப்பகுதியில் அவர் விளக்கி அறிவுறுத்துதற்கு எடுத்துக்கொண்ட பொருளும் சங்கத் தமிழின் வழியனவான ஞான் உண்மைகளேயாதல் ஐயுறவின்றி இனிது தெரிந்து கொள்ளப்படுமென்று 'ஒளவையார் திருவுளம்' என்ற நூல் எழுதிய இளவழகனர் குறிப்பிடுகின்றார். வயிற்றின் கொடுமையைக் கூற வந்தவர், பசி பொல்லாதது என்றும் அதன் முன் மானம், குலம், கல்வி வண்மை, அறிவுடைமை தானம், தவம், உயர்ச்சி தாளாண்மை, காமம் ஆகப் பத்தும் பறந்துபோமென்றும் சுட்டிக் காட்டி,

ஒருநாள் உணவை ஒழி
யென்றால் ஒழியாய்
இருநாளைக்(கு) ஏல் என்றால்
ஏலாய் — ஒரு நாளும்
என் நோ(வு) அறியாய் இடும்
பைகூர் என் வயிறே
உன்னோடு வாழ்தலரிது.

என்று ஓர் நகைச்சுவையுடன் பேசுகின்றார். சேவித்தும் சென்றிரந்தும் தெள்நீர்க்கடல் கடந்தும் பாவித்தும் பாராண்டும் பாட்(டு) இசைத்தும் பழ்படு வயிற்றின் கொடுமையை நீக்க எத்தனை முயற்சி சஞ்சலம். எண்ணம் நினைத்தது முடிகின்றதா? ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறுமல்லவா? இதையே,

ஒன்றை நினைக்கின் அது
ஒழிந்திட்(டு) ஒன்றாகும்
அன்றி அது வரினும்
வந்தெய்தும் — ஒன்றை
நினையாத முன் வந்து
நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்!

எனத் திருவள்ளுவர் கருத்தை வலியுறுத்துகின்றார்.

விதிவழி மதியா? மதி வழி விதியா? என்ற கேள்விக்கு விடையாக,

செய்திவினை யிருக்கத்
தெய்வத்தை நொந்தக்கால்
எய்தவருமோ? இருநிதியம்!
— வையத்து
அறம்பாவம் என்ன அறிந்(து)
அன்றிடார்க்கு இன்று
வெறும்பானை பொங்குமோ?
சொல்!

எனகிறார். விதியை நல்விதியாக மாற்றிக்கொள்ள வழியுண்டு, அது ஈகையென்னும் வழி! அதாவது விதியை மதியால் வெல்லலாமென்பது.

சிவாயநம என்று
சிந்தித்திருப்பார்க்(கு)
அபாயம் ஒருநாளும்
இல்லை — உபாயம்
இதுவே மதியாகும்

அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்!

என்று பஞ்சாக்ஷரத்தை ஓதி வரவேண்டுமென்றும் ஓதுகின்றவர்களுக்கு வாழ்வில் ஒரு துன்பமும் இல்லையென்றும், உயிர் உய்வதற்கு பஞ்சாக்ஷரம் ஜெபிப்பதே சிறந்த வழியென்றும் ஐந்தெழுத்தை ஓதுவதே மதியென்றும் இந்த மதியினால் விதியை விலக்கலாமென்றும் விதயை வேறு எதாலும் விலக்கமுடியாதென்றும் அந்த விதிக்குத் தகுந்தவாறே மதியும் அமையுமென்றும் உலகமக்களுக்குப் போதிக்கின்றார். ஒளவையார் ஐங்கரற்கு அன்பராயும் அறுமுகற்கு நண்பராயும் அம்மையப்பருக்கு அடிமையாயும் திகழ்ந்து அருள் பெற்று வாழ்ந்த அம்மையாராகலின் அவரவாக்குகளெல்லாம் அருள் வாக்கென்பது வெள்ளிடைமலை வாக்குகள் எளிமையும் இனிமையுங் கூடி அருளுங் கலந்து நிற்பதால் தமிழுலகில்

## கயிற்றுத் தொழிற் பாடசாலை

சாவகச்சேரியில் சென்ற திங்கட்கிழமை அரசாங்கக் கயிற்றுத் தொழிற் பாடசாலை ஒன்றை உள்நாட்டு மந்திரி திரு. A. இரத்நாயக திறந்து வைத்தார். அத்தருணம் திரு. V. குமாரசாமி, திரு. V. S. கார்த்திகேசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இன்றும் இலங்குகின்றன. இளைஞர், முதியவர், ஆண், பெண், மாணவர் எனையோரும் கற்கக் கற்கத் தெவிட்டாத அமிழ்தெனக் கருதிப் பள்ளியிலும் வீட்டிலும் பாடிப்பாடி அநுபவித்து வருகின்றார்கள். காரைக்காலம்மையார் ஸ்ரீ ஆண்டாள் பாக்கள், உலகியல் நன்கறிந்து ஞான மார்க்கத்திற் சென்றவர்களுக்கேகனகுப்பயன்படும். ஆயின் ஒளவையார் பாடல்கள் எல்லாத் துறையிலும் எல்லா மக்களுக்கும் எளிதில் நீதிகள் அறியவும் பக்தியில் செல்லவும் தகைமையுடைய ஓர் ஒப்பற்றசிறப்புடையன. இஃதல்லவோ யாரும் உரிமை பெற்றனுபவிக்கும் இலக்கியக் குடியரசு.


L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=0=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.



## கற்றோர்க்கழகு கசடற மொழிதல்

யாழ்ப்பாணம் – வண்ணிழக்கு,

பொ. கா. தாமோதரம்பிள்ளை கடையில்

# வெந்தீசு விற்பனவு

| நம்பர் | உ. மீ. ஆ. | கொடுத்த ரூபாய். | ஊர் பெயர் நகை உருப்படி விபரம். | |
|---|---|---|---|---|
| 4850 | 13 8-51 | 300 — | மண்டதீவ சின்னத்தம்பி கந்தவனம் வளையல் காப்பு சோடி | 1 |
| 4947 | 24-9-51 | 50 — | K.K.S. ரோடு 292 ந. சுப்பையா பத்தர். துரை சிகிலமோதிரம் | 1 |
| 4987 | 15-10 51 | 25 — | அராலிதெற்கு செல்லப்பா சுப்பிரமணியம் இமி. வெ.சி.கல் தோடு சோடி | 1 |
| 5048 | 22-11-51 | 8 — | நீராவியடி 74/2 ந. செல்லையா சிவசின்னம் ஆடுதன் மோதிரம் | 1 |
| 5088 | 4-12-51 | 100 — | கஸ்தூரியார் ரோடு 109 ந. K. P. A. சில்வா கை வாச்சு சங்கிலி | 1 |
| 5101 | 10-12 51 | 125 — | புத்தூர் மேற்கு கந்தையா தம்பு கொக்கி இல்லாத சாட்டுக் கொடி | 1 |
| 5136 | 12-1-52 | 50 — | மானிப்பாய் கட்டுடை சிவரெத்தினம் பொன்னம்மா இமி. கல். புரோச்சு ஒரு கல் இல்லை | 1 |

வெந்திஸ் விற்பனவு
14—2—1953 சனிக்கிழமை

S. Pasupathy Chettiar,
Auctioner & Broker.

M. 226, 28, 27—1—53.



●நீங்கள் இளமைப் பருவத்தையடைய ○○
சி. எம். சாமி
தங்க பஸ்பம்
உபயோகியுங்கள்
இரத்தவிருத்தியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.
அபார பலமும் பசியும், இரதத விருத்தியும் உண்டாக்கும்.
இல்வாழ்க்கையில் அதியற்புத சுகந்தரும.
நீரழிவு, பவுத்திரம, மூலம், குன்மம, இடுப்புவலி,
வாய்வு, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும்,
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ.25—0—0

குருபஸ்பம் (தொய்வுக்கு)
தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு
தொண்டைவலி, க்ஷயம முதலிய சகல வியாதிகளையும நீக்கும்.
அருமையானது.
24 நாள் புட்டி 1க்கு விலை ருபா 20
மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கிபாட்லாக் இளம்) (I)



| திறமான | திறமான |
|---|---|
| தேக்க மரங்கள் | முனிமார்க்ஓடுகள் |
| பல தினிசுகளிலும் | 13½, 14 இஞ்சிகளிலும் |

வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம்ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா]
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறுப்பர்.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond residing at 245; Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Tuesday January 27 1953

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org